
43



# தும்பி

சிறுவர் மாத இதழ்



தயவும் தானமும் சேர்ந்த மனமே தெய்வம்!

வள்ளலார்

தும்பி
சிறுவர் மாத இதழ்
அக்டோபர் 2020

கதைத் தேர்வு
சிவகாமி ஈஸ்வரமூர்த்தி

ஒளிப்படங்கள்
ஆனந்த்குமார்

ஆசிரியர்
சிவராஜ்

தொடர்புக்கு
65/21, ஐயங்குளத் தெரு,
முதல் குறுக்குத் தெரு,
திருவண்ணாமலை - 606 601
பேச : 9843870059
thumbigal@gmail.com
fb:thumbigal4children
www.thumbigal.com

For Private
Circulation Only



பிரார்த்தனை

பனை காக்கும் மீட்பர்
காட்சன் சாமுவேல்
அவர்களுக்கு...

நன்றியும் ப்ரியமும்

ஆதி-மணி, அகமகிழினி,
அரவிந்த் மோகன்ராஜ்,
கவிஞர் யுகபாரதி,
பனையேறி பாண்டியன்,
'நம்ம ஊரு' பூபதி, நித்யா
ஹரி, மலர்விழி, ஜோதிமணி,
அனிதா, விசாலாட்சி,
பி.ஜி. செந்தில்குமார்
பல் மருத்துவமனை,
வலசைதுருவம் கிணற்றடி,
*The Prophet* அனிமேஷன்
திரைப்படம்

வணக்கம் செல்லங்களா,

எல்லாரும் நல்லா இருக்கீங்கதான? ரொம்ப மகிழ்ச்சி! மழைக்காலம் துவங்கிடுச்சு. ஆவணியும் புரட்டாசியும் மழை மாதங்கள். ஏரி, குளம், ஆறு, கிணறு எல்லாம் நிரம்பி வழியுற நல்ல மழை எல்லா ஊர்லயும் பொழிஞ்சு பெய்யட்டும். கார்காலம் முடிஞ்சதுக்கு அப்புறம் குளிர்காலம் வந்திடும்!

ம்... அக்டோபர் மாசம் 5ம் தேதி ஒரு முக்கியமான மனிதரோட பிறந்தநாள். அவரு யாருன்னு உங்களால கண்டுபிடிக்க முடியுதா? அவர்தான் ‘வள்ளலார்’!

இவரோட இயற்பெயர் இராமலிங்க அடிகளார். சிதம்பரம் பக்கத்துல இருக்க மருதூர்ல பிறந்தவரு. இவர் ஒரு ஆன்மீகவாதி, சமூக சீர்திருத்தவாதி. ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ ன்னு பாடி தாவரங்கள், புழு பூச்சிகள், மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களும் சமம்-ன்னு சொன்னவரு. தமிழ்ல முக்கியமான புத்தகமான திருஅருட்பா எழுதுனவரு. வடலூர்ல இவர் வச்ச ‘அணையா அடுப்பு’ ஏழை மக்களோட பசியை இப்பவரை போக்கிவருது!

சரிசரி செல்லங்களா... இனி கதை!

யாருக்கெல்லாம் நீர்யானை பிடிக்கும்? ஓ... எல்லாருக்குமே பிடிக்குமா! இப்ப நாம பாக்கப்போற கதை ஒரு நீர்யானைக் குட்டியோட கதை! சலிப்பா இருந்த நீர்யானைக் குட்டி என்னவெல்லம் செஞ்சுச்சு தெரியுமா? அதுக்கு எத்தன நண்பர்கள் தெரியுமா? காட்டுக்கு உள்ளே அது எப்படி மகிழ்ச்சியா இருந்துச்சுன்னு பாக்க உங்களுக்கும் ஆசையா? அப்ப வாங்க, கதைய வாசிப்போம்!

வாங்க... வாங்க... தும்பிகளா
மழையில பாடுற தவளை போல
மனசார மகிழ்வோம் கதையாலே!

முத்தங்களுடன்
தும்பி

# மகிழ்ச்சியாக இருந்த நீர்யானை

ரேச்சல் எலியட் • ஜான் பெண்டல்-புருனெல்லோ

# The Hippo who was Happy


Rachel Elliot • John Bendall-Brunello

தமிழில் : சிறகினி, அனாமிகா



''எனக்கு ஒரே சலிப்பாக இருக்கிறது''
என நீர்யானை அலுத்துக் கொண்டான்.

"Bored, Bored, Bored!" said Hippo.



அம்மாவுக்கு உதவியாக உணவு சேகரிக்கவும்
அவனுக்கு விருப்பமில்லை.

He didn't want to help Mummy gather food.




அப்பாவுடன் சேர்ந்து சூரியக்குளியல் குளிக்கவும்
அவன் விரும்பவில்லை.

He didn't feel like sunbathing with Daddy.

''செய்வதற்கு எதுவுமே இல்லை. எனக்கு வெறுப்பாக உள்ளது''
என முணுமுணுத்தான் அவன்.

"There's nothing to do," he grumbled. "I'm fed up."



‘‘நீ எனக்காக ஒரு சிறப்பான வேலை செய்ய முடியும்.
உன் அத்தைக்காக நான் சுவையான நீர்த் தாவரங்கள் பறித்துள்ளேன்.
அதை அவர்களிடம் நீ கொண்டு போவாயா?’’ எனக் கேட்டாள் அம்மா.

‘‘உங்களுக்குப் பிடித்திருந்தால் செய்கிறேன்’’ என்றான்.

“You can do a special job for me,” said Mummy.
“I’ve picked a juicy water plant for your Aunty. Will you take it to her?”

“If you like,” said Hippo.




காட்டின் மறுபுறம் அவனது அத்தை வசித்து வந்தாள்.

Aunty lived on the other side of the jungle.

சிக்கலான தரைத் தாவரங்கள் வழியாக நீர்யானை புகுந்து சென்றான்.

Hippo stomped through the tangly undergrowth.



டங்! டங்! டங்!
அந்தச் சத்தம் அவனைக் கொஞ்சம் தைரியமாக உணர வைத்தது.

STOMP! STOMP! STOMP!
The noise made him feel a little bit better.



அத்தை மண்குளியல் குளித்துக்கொண்டு இருந்தாள்.

‘‘நீர்த் தாவரம் தந்ததற்கு நன்றி. நீ என்னோடு சேற்றில் புரள விரும்புகிறாயா?’’ என்றாள்.

சேற்றை எப்படி காற்றில் துப்பி விளையாடுவது என்பதை அத்தை அவனுக்குக் காட்டினாள்.

Aunty was having a mud bath.

“Thank you for the water plant,” she said. “Would you like to wallow in the mud with me?”

Aunty showed Hippo how to blow fountains of mud into the air.

நீர்யானை துப்பிய சேறானது அத்தையின் சேறு அளவுக்கு உயரமாகப் போனது!

Hippo’s fountain went as high as Aunty’s!


பின்பு நீர்யானையின் அத்தை சர்ர்ர்ர்ர்! என்ற
உரத்த சத்தத்துடன் சேற்றில் இருந்து வெளியே வந்தாள்.

Then Aunty pulled herself out of the mud
with a loud SLURRRRP!



‘‘என் ஒட்டகச்சிவிங்கி நண்பனுக்காக நான் சில
மொறுமொறு வேர்கள் வைத்துள்ளேன். நீ அவனிடம் அதைக் கொண்டு போவாயா?’’

“I’ve got some crunchy roots for my friend Giraffe,” she said.
“Will you take them to him?”



‘‘உங்களுக்குப் பிடித்திருந்தால் செய்கிறேன்’’ என்றான்.

“If you like,” said Hippo.

ஒட்டகச்சிவிங்கி மிக உயரமான மரங்களிலிருந்து
இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தது.

‘‘வேர்களைத் தந்ததற்கு நன்றி. நீ என்னுடன்
இலைகளைப் பறிக்க விரும்புகிறாயா?’’

Giraffe was picking leaves from the tallest trees.
“Thank you for the roots,” he said.

“Would you like to pick leaves with me?”




ஒட்டகச்சிவிங்கிகள் மரங்களில் சாய்ந்து, தங்கள் உதடுகளால்
இலைகளை எவ்வாறு பிடிக்கின்றன என்பதை
நீர்யானைக்குக் காட்டியது ஒட்டகச்சிவிங்கி.

Giraffe showed Hippo how giraffes lean on trees
and reach for the leaves with their lips.

நீர்யானை மேலே வந்ததும், இலைகள் அவனது
உதடுகளைக் கூச வைத்து அவனைச் சிரிக்க வைத்தன!

When Hippo reached up, the leaves
tickled his lips and made him giggle!



அதன்பின் ஒட்டகச்சிவிங்கி பெர்ரிப் பழங்கள் நிரம்பிய
ஒரு கிளையைக் கண்டுபிடித்தது.


‘‘என் தோழியான குரங்கு இவைகளை மிகவும் விரும்பும்.
நீ இவைகளை அவளிடம் கொண்டு போவாயா?’’

‘‘உங்களுக்குப் பிடித்திருந்தால் செய்கிறேன்’’ என்றான்.

Then Giraffe found a twig packed with berries.

“My friend Monkey would like these,”
he said. “Will you take them to her?”

“If you like,” said Hippo.





ஆற்றின் அருகே ஒரு உயரமான மரத்தில் அந்தக் குரங்கு வசித்து வந்தாள்.
அவள் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு ஊஞ்சலாடினாள்.

Monkey lived in a tall tree beside the river.
She was swinging from branch to branch.

''பெர்ரிப் பழங்களுக்கு நன்றி. நீ என்னோடு விளையாட விரும்புகிறாயா?''
''மிகவும் விரும்புகிறேன்!'' என்றான் நீர்யானை.

"Thank you for the berries," she said. "Would you like to play with me?"

"I'd LOVE to!" said Hippo.



குரங்கும் நீர்யானையும் பகல் முழுதும் விளையாட்டுகள் விளையாடினர்.
அவர்கள் ஆற்றுக்குள் தொப் எனக் குதித்தனர்.

Monkey and Hippo played games all afternoon.
They belly flopped into the river.

அவர்கள் புல்வெளிக் கரைகளில் உருண்டனர்.

They rolled down the grassy banks.



அவர்கள் பெர்ரிப் பழங்களைப் பகிர்ந்துகொண்டு,
சோம்பேறி முதலைகள் மீது தண்ணீரைத் தெளித்தனர்.


They shared the berries and splashed the lazy crocodiles.





சூரியன் மெல்லமெல்ல வானத்தில் கீழ்நோக்கி மூழ்கியது.
''இது நான் வீட்டுக்குப் போவதற்கான நேரம்'' என்றான் நீர்யானை.

The sun sank lower and lower in the sky.
"It's time for me to go home," said Hippo.



நீர்யானை வீட்டுக்கு வந்தபோது, அம்மாவும் அப்பாவும் அவனுக்காகக் காத்திருந்தனர்.
அவர்கள் எல்லோரும் சுவையான புற்களை மென்று தின்றார்கள்.

''இந்தநாள் உனக்கு மகிழ்ச்சியாக இருந்ததா?'' எனக் கேட்டாள் அம்மா.
நீர்யானை தீவிரமாக யோசித்தான்.

When Hippo got home, Mummy and Daddy were waiting.
They all munched on juicy grass.

"Have you had a happy day?" asked Mummy.
Hippo thought hard.



‘‘நான் அத்தையுடன் சேர்ந்து
சேற்றை காற்றில் துப்பினேன்’’.

“I blew mud fountains
with Aunty”.



‘‘நான் ஒட்டகச்சிவிங்கியுடன் சேர்ந்து
இலைகளைப் பறிக்க கழுத்தை நீட்டினேன்’’.

“I stretched for leaves with Giraffe”.

‘‘முதலில் நான் சலிப்பாக இருந்தேன்.
ஆனால் பின்பு, நான் என் நண்பர்களுடன் சேர்ந்து
சில செயல்களைச் செய்ய ஆரம்பித்தேன்...’’

“I was bored at first,” he said.

“But then I started doing things
with my friends...”





‘‘நான் குரங்குடன் விளையாட்டுகள்
விளையாடினேன்.

இது ஒரு மிக அற்புதமான நாள்!’’

“I played games with Monkey.
It’s been a BRILLIANT day!”

‘‘இது இன்னும் முடியவில்லை!’’ என்றார் அப்பா.
அவர்கள் எல்லோரும் சேர்ந்து அந்த குளிர்ந்த ஏரிக்குள் குதித்தனர்.

“It’s not over yet!” said Daddy.
And they all jumped into the cool lake together.





நீர்யானைகள் என்பவை ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நீர்வாழ் பாலூட்டி உயிரினம். இவை ஒரு ‘தாவர உண்ணி’ ஆகும். பொதுவாக கூட்டங்களாக வாழும். ஒரு கூட்டத்தில் 40 நீர்யானைகள் வரை இருக்கும்.

இவை 40 முதல் 50 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. வளர்ந்த நீர்யானைகள் 1500 முதல் 3200 கிலோகிராம் எடை இருக்கும். பெண் நீர்யானைகள் ஆண் நீர்யானைகளைவிட சிறியவை. பரிணாம வளர்ச்சியில் இவை 3 கோடி ஆண்டுகளுக்கும் மேலாக பூமியில் வாழ்ந்து வருகின்றன.

நீர்யானைக் குட்டிகள் தண்ணீருக்கு உள்ளே பிறப்பதால், அவை தனது முதல் மூச்சுக்காகவே நீந்தி நீர்மட்டத்திற்கு வருகின்றன. இவை தண்ணீருக்கு அடியிலேயே தாய்ப்பால் அருந்துகின்றன.

Hippopotamus are aquatic mammals from Africa. They are herbivores of nature and mostly live in colonies. Generally a hippopotamus colony consists of 40 beings.

They live up to 40-50 years. A fully grown hippopotamus weighs from 1500-3200 kgs. The females are generally smaller in size compared to the males. They date back up to 3 crore years in evolution.

Usually, the calves are birthed underwater and they will have to swim to the surface to take in their first breath. The baby hippos are often fed underwater.



மூத்த குழந்தைகளுக்கு …

பூனை விளையாட்டு

கிருஷ்ணகோபால்

செல்வியின் குழந்தைகள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தனர். குழந்தைகளில் மூத்தவனுக்கு ஆறு வயசிருக்கும். இளையதுக்கு ஐந்து வயது முறையே இருக்கலாம். குழந்தைகள் தூங்கி எழுந்து பள்ளிக்குச் செல்ல வைப்பதற்குத் தயாராக எந்த ஒரு புதுமையான யோசனையும் இதுவரைக்கும் செல்விக்குக் கிடைத்தபாடில்லை. அலுத்துப்போன பழைய முறைகளையே திரும்பப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இன்று அதட்டல் கொடுத்து எழுப்ப வேண்டியதுதான் என மனதளவில் தீர்மானித்திருந்தாள். ஆனால், குழந்தைகளை அடிகொடுத்து எழுப்பவேண்டும் என்கிற புத்தி இதுவரைக்கும் அவளிடம் உருக்கொள்ளவில்லை. அடித்து எழுப்புவது அறம் சார்ந்த செயல் அன்று என்பதை அவள் உள்மனது கூறியது. தன் சிறு வயதில், தூங்கும் சிறு குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்குப் போக அதட்டியோ அல்லது அடி கொடுத்தோ எழுப்பும் தாய் தந்தையர் எவரையுமே பார்த்ததில்லையே. நாம் நன்றாகத்தானே இருக் கிறோம் என்கிற சிந்தனை அவளில் இருந்தது. இவ்வாறு அவள் சிந்தனை இருந்ததே தவிர குழந்தைகள் இயல்பாகத் தூங்கி எழட்டும், எழுந்த பிறகு ஆசுவாசமாகப் பள்ளிக்கூடத்திற்கு விடலாம் என்றும் அவள் விட்டது கிடையாது. சமீபகாலமாக ஒன்றை உணர்ந்திருந்தாள். பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் அதிகாலையிலேயே குழந்தைகள் எழுந்து உற்சாகமாகப் பழக்கம் பேச ஆரம்பித்து விடுவதும், பள்ளிக்கூடம் உள்ள நாட்களில் நெடு நேரம் தூங்கி எழுவதுமாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். படிப்பு உள்ள நாட்களில் குழந்தைகளை எழுப்ப ஒருநாள் நூடுல்ஸ், இன்றைக்கு மட்டும்தான் பள்ளிக்கூடம் நாளைக்கு லீவு என்று சொல்லி எழுப்புவதும் ‘மாமம்மை வந்திருக்கா பாருங்க மக்கா’ என்று சொல்லி எழுப்புவதும், ‘ஸ்னாக்ஸ்சுக்கு என்னது வாங்கி வச்சிருக்கேன் பாருங்க’ என்று அவர்கள் விரும்பும் பொருட்களை முந்தைய நாட்களில் வாங்கி வைத்துவிட்டு அவர்களை எழுப்புவதுமாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஆனால், இன்று அவள் எதிர்பார்க்காமலேயே குழந்தைகளை எழுப்புவதற்கான காரணம் அவர்களுக்குக் கிடைத்திருந்தது. முற்றம் என்று சொல்லிக்கொள்ளும் சிமெண்ட் தரையைத் தூத்து, தண்ணீர் தெளித்து கோலம் போட விளக்குமாறை எடுத்து வரும்போது, தண்ணீர் பிடித்து வைத்திருந்த குட்டுவத்தை தற்செயலாக எட்டிப்பார்த்தாள். அங்கு ஒரு மாதம் பூர்த்தி ஆகாத தவளைக்குட்டி ஒன்று அங்குமிங்கும் நீந்தியபடியிருந்தது. அதைப்பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது. குழந்தைகளை இன்று எழுப்புவது அவ்வளவு சிரமம் இருக்காது என நினைத்துக் கொண்டாள்.

இப்போது குழந்தைகள் தூங்கி எழும்பிய முகத்தோடு வெளியே வந்தார்கள். அவள் முக மலர்ச்சியோடு குட்டுவத்தைக் காட்டினாள். தவளைக் குட்டி பின்னங்காலை எம்பி எம்பி நீந்துவதைப் பார்த்தார்கள். பிறகு அது குட்டுவத்துக்குள் அங்கு மிங்கும் துள்ளி ஓடுவதைப் பார்த்துக்கொண்டு, உற்சாகத்தில் குரல் எழுப்பிக்கொண்டு, அதைப் பிடிக்க முயல்வதும் அதன் மீது தண்ணீர் கோரி ஊற்றுவதுமாக நின்றிருந்தார்கள். குழந்தைகள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதைப்





பக்கத்தில் வந்து கவனித்த குழந்தைகளின் தந்தை அதைப் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே செய்ய வேண்டுமென்றும், எக்காரணத்தைக் கொண்டும் தொட்டுப்பிடித்து விளையாடக் கூடாதென்றும் எச்சரித்துவிட்டுச் சென்றார். குழந்தைகள் தவளையை வேடிக்கைப் பார்த்த மனதோடு பள்ளிக்குச் சென்றார்கள்.

அவர்கள் பள்ளிவிட்டுத் திரும்பிவந்து பார்க்கும் போது தவளையைக் காணவில்லை. ‘தவளையை காக்கா தூக்கிட்டுப் போயிட்டு மக்கா’ என தாய் சொன்னாள். தாய் சொன்னதை அந்தக் கள்ளங் கபடமற்ற குழந்தைகள் நம்பத் தயாராகயில்லை. அவர்கள் அடம்பிடித்துத் தரையில் புரண்டு விழுந்து அழுதார்கள். குழந்தைகளைச் சமாதானப் படுத்த கடைக்குச் சென்று சிப்ஸ் வாங்கிக் கொடுத்துச் சமாளித்தாள்.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. மதியவேளை சாப்பிட்டுவிட்டு, படுக்கையில் குழந்தைகள் அசந்து தூங்கிவிட்டார்கள். தூங்கி எழுந்ததும் குழந்தைகளில் ஒருவன் அம்மாவிடம் ‘எம்மா காச்சலடிக்குமா பாரும்மா’ என்றதும் அவள் தேகத்தில் கைவைத்துப் பார்த்தாள். ‘இல்ல மக்கா’ என்றதும் ‘காதுக்குள்ள காச்சலடிக்குதும்மா’ என்றது குழந்தை. சாயங்காலப் பொழுதை விடியற்காலை என எண்ணிக்கொண்டு கேட்கிறான் என்பதைப் புரிந்துகொண்டாள் அம்மா. ‘பிறகு குழந்தை அம்மா இண்ணைக்கு ஸ்கூல் உண்டா?’ எனக் கேட்டது. ‘இல்லம்மா சாயங்காலம் தான ஆச்சி, சாயங்காலம் கழிஞ்சதும் இராத்திரி ஆகும். திரும்பவும் தூங்கி எழுந்து விடிஞ்சுறும்.

அப்புறந்தான் ஸ்கூலுக்குப் போணும்’ என அவள் குழந்தையைக் கொஞ்சிக்கொண்டே விளக்கம் கொடுத்தாள். கேள்விகேட்டக் குழந்தைக்குப் பதில்சொல்லிக் கொண்டிருக்கும்போதே மூத்த குழந்தையும் முழித்துவிட்டது. பிறகு குழந்தைகள் உற்சாகமாகி, புளியமரத்தடிக்கு விளையாடச் சென்றார்கள்.

ஆனி மாத தூறலைப் பொருட்படுத்தாமல் வேண்டா வெறுப்பாக சமையல் வேலை தொடங்குவதற்கு வெளி அடுக்களைக்கு வந்தாள் செல்வி. அவள் காலடியிலிருந்து விநோதமான ஒலி கேட்டது. அந்த மையல் இருட்டில் கூர்ந்து நோக்கினாள். அவள் முகத்தில் ஆச்சர்யம் கலந்த பயம் ஓடியது. அந்த ஒலி, அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் விறகின் அடியிலிருந்ததை உணர்ந்தாள். அவள் குனிந்து பார்க்கும்போது மூன்று பூனைக்குட்டிகள் ஒன்றை ஒன்று நெருக்கியடித்துக் கிடந்தன. அந்த விடிகால வெளிச்சம் அதன் பிராயத்தைக் கணிக்கப் போதுமானதாக இல்லை. வீட்டிற்குள் சென்று டார்ச்லைட்டு எடுத்து வெளியில் வந்து விறகு பக்கத்தில் சென்று வெளிச்சத்தை அதன் மீது பாய்ச்சினாள். கண்ணு முழிக்காத பூனைக் குட்டிகள் மழைக்கால தூறலின் குளிர் தெரியாமலிருக்க ஒன்றை ஒன்று நெருங்கி இடித்துக் கிடந்தன. செல்வியின் முகம் புன் சிரிப்பில் மலர்ந்தது. உற்சாகம் பொங்க அன்றைய சமையல் பணிகளைத் தொடங்கினாள். சிறுவர்களை எழுப்புவதற்கு டி.வி.யை ஆன் செய்து கார்டூன் நெட்ஒர்க்கை திருப்பி வைக்க வேண்டும் என்கிற உத்தேசம் செல்வியிடம் இருந்தது. ஆனால்,





அதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. எப்போதுமே குழந்தைகளை எழுப்புவதற்கு முன்கூட்டியே சிறு அனக்கம் கொடுத்து, அவர்கள் எழும்புவதற்குத் தயார்படுத்தலைக் கூட இன்று பிரயோகிக்க அவள் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. தூங்கட்டும், எப்போது எழும்ப வேண்டுமோ அப்போதே பூனையைக் காட்டி எழுப்பிவிடலாம் என்பது அவளின் எண்ண மாயிருந்தது. ஒரு குரலுக்கு பூனைக்குட்டியைப் பார்க்க வந்துவிடமாட்டார்களா என்ன? அவள் நம்பிக்கை வீண்போகவில்லை. ‘மக்கா நம்ம வீட்டு அடுக்களக்குள்ள பூனைக்குட்டிக் கிடக்குல, வந்து பாருங்கல்ல’ என்று சொன்னதுதான் தாமதம் சிறுவர்கள் இருவரும் எழுந்து, ‘எங்க எங்க கிடக்குது’ என்று கேட்டுக்கொண்டே விடிலிப் பக்கம் வந்து அரக்கப்பரக்கப் பார்த்தார்கள். அம்மா அதன் இருப்பிடத்தைச் சுட்டிக்காட்டினாள். குழந்தைகள் இருவரும் கண்களைக் கசக்கிக் கொண்டு விழிகள் விரித்து உற்றுநோக்கினார்கள். பிறகு அதன் மிருதுத்தன்மையை உணரவேண்டும் என்று விரும்பியபோது பூனைக்குட்டிகளைத் தொட்டுப் பார்த்தார்கள். மூன்று பூனைக் குட்டிகளை எப்படி பங்கிட்டுக்கொள்வது என்று குழம்பியவாறு அதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு குழந்தையைப்போல் மார்பில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விளையாடுவதை அம்மா ரசித்துக் கொண்டிருந் தாள். அப்போது அப்பா வந்தார். ‘லே பூனையைத் தொட்டுப்பிடிக்காதீங்க. பூனைமுடி வயித்துக்குள்ளப் போனா வயித்தவலி தீராது’ எனக் குழந்தைகளை அதட்டினார். சிறுவர்கள் அப்பாவைக் கண்டுகொள்ள வில்லை. பிறகு அம்மா சொன்னாள், ‘சரி மக்கா விளையாடினது போதும், ஸ்கூலுக்குப் போயிட்டு வந்தபிறகு விளையாடலாம்’ என அவர்களை பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு அவசரப்படுத் தினாள். இருப்பினும் கையில் வைத்திருந்த பூனைக் குட்டிகளை இறக்கிவிட மனமில்லாதவர்களாய், ‘தவளக் குட்டிய காக்கா பிடிச்சிட்டுப்போனது மாதிரி பூனைக்குட்டிகளை எதுவும்தூக்கிட்டுப் போயிடாமப் பாத்துக்க’ என்கிற கட்டளை பிறப்பித்தார்கள். அதற்கு அவள் உத்திரவாதம் வழங்கிய பிறகுதான் குழந்தைகள் அந்த இடத்தை விட்டகன்றார்கள்.

பள்ளிக்குச் சென்று வீடு திரும்பிய குழந்தைகள் பூனைக்குட்டியின் நினைவாகவே விடிலியை நோக்கி ஓடிவந்தார்கள். ஸ்கூல் பேக் முதுகில் தொங்கிக்கிடந்தது. விறகுக்கூடியில் பூனைகள் கிடந்த இடத்தைத் தேடினார்கள். பூனைக்குட்டிகள் அங்கு இல்லை என்பதைத் தெரிந்துகொண்டவர்கள் தோளில் தொங்கிக்கிடந்த ஸ்கூல் பேக்கை வீட்டிற்குள் தூக்கி எறிந்துவிட்டு, சற்றுத்தள்ளி எங்கேனும் பூனைகள் கிடக்கிறதா என்று பார்த்தார்கள். எங்குமே பூனைக்குட்டிகள் இல்லை. அவர்களின் கோபம் அம்மாவிடம் திரும்பியது. என்ன பதில் சொல்வ தென்று தெரியாது குழந்தைகளைக் கவனியாது போல் நின்றிருந்தாள். குழந்தைகள் அம்மா மீது புகார் சொன்னார்கள். ‘நீதான் எங்கேயோ பூனையைத் தூக்கி எறிஞ்சிட்ட, தவளகுட்டிய தூக்கி எறிஞ்சமாதிரி’. அவள் குழந்தைகளுக்குப் பூனைக்குட்டிகள் காணாமல்போன கதையைச் சென்னாள். ‘மக்கா பூனை குட்டிப் போட்டுண்ணா, அந்தக் குட்டிகள ஏழு இடங்களுக்கு மாறி கொண்டு போகுமக்கா, குட்டிய யாரும் தூக்கிட்டுப்

போயிறக் கூடாது பாத்தியா, அதுதான் தாய் பூனை விவரமா இந்தக் காரியத்தைச் செய்யுவு. அப்படித்தான் நம்ம வீட்டுக்கும் அது தூக்கிட்டு வந்திருக்கு தெரியுதா?' அம்மா சொன்ன கதை குழந்தைகளுக்கு விவரம் புரியவில்லையென்றாலும் குழந்தைகள் அம்மாவை நம்பத் தயாரில்லை. ஸ்கூல் யூனிபார்மை கழற்றப் பொறுக்காமல் வீட்டைச் சுற்றிலும் பக்கத்துவீட்டு மொட்டை மாடியிலும் போய்த் தேடினார்கள். எங்கும் அதைக் காணவில்லை, அப்போதுதான் சக வகுப்புத் தோழனை எதிர்கொண்டனர். அவன் முகத்தில் ஆர்வம் வழிய, 'மக்கா புளியமரத்து மூட்டு விறகுக்கு அடியில மூனு பூனைக்குட்டி கிடக்கு மக்கா' என சொன்னதுதான் தாமதம் குழந்தைகள் துள்ளிக்குதித்து அவன் சொன்ன திசையை நோக்கி ஓடினார்கள். காலையில் தன் விடியலியில் பார்த்த அதே பூனைக்குட்டிகள் தான் அவை. மூன்று பூனைக்குட்டிகளும் ஒட்டிக்கிடந்தன. அந்தக் குழந்தைகள் பூனைக்குட்டிகளைக் குழந்தையைத் தூக்குவதுபோல் நெஞ்சோடு அணைத்துத் தூக்கிக்கொண்டு தன் வீட்டின் விறகுக்கடியில் கொண்டுபோய் மெதுவாக வைத்தார்கள். இதற்கிடையே குழந்தைகளைக் காணவில்லையே எனச் சிறிய சுள்ளிக்கம்பு ஒன்றினைக் கையில் எடுத்தபடி வீட்டைவிட்டு வெளியேறத் தயாராக இருந்தாள் செல்வி. குழந்தைகளைத் திரும்பவும் பூனைக் குட்டிகளோடு கண்டவள் பரவசமானாள். 'பூனைக் குட்டிகளைத் தொட்டு விளையாடாதீங்க, தாய்ப் பூனை பார்த்ததுன்னா உங்கள கடிச்சுவச்சிரும்' எனப் பொய்க்கோபம் காட்டிவிட்டு வீட்டு வேலைகளைப் பார்க்கச் சென்றாள். மெத்தென்று பஞ்சு போன்ற பூனையின் உடலை நெடுநேரம் சுமந்துகொண்டிருக்க குழந்தைகளுக்கு விருப்ப மாயிருந்தது. இருப்பினும் அதனுடன் உள்ள உறவை அவ்வளவு சீக்கிரமாகத் துண்டித்துச் செல்ல மனமில்லாதவர்களாய், சிரட்டையில் அதற்குத் தண்ணீர் கொண்டு வைத்தார்கள். தன் இருப்பிடத்தைவிட்டு எங்கும் நகர்ந்து செல்லப் பழக்கப்படாத பூனைகள் தண்ணீர் வைத்திருந்த இடத்தை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. குழந்தை களில் மூத்தவன் பூனைக்குட்டி ஒன்றின் கழுத்தைப் பிடித்துத் தூக்கி தண்ணீர் இருந்த சிரட்டையின் உள்பக்கமாக அழுத்திப் பிடித்தான். பூனை எந்தவித உணர்வுமற்று உடலை நெளித்தபடி நாக்கைச் சுளைத்தது. பல்கூட முளைக்காத பூனையின் உடலிலிருந்து வந்துகொண்டிருந்த சிறிய கதகதப்பை உணர்ந்து கொண்டிருக்கையிலே பின்னாளிருந்து அம்மாவின் குரல் கேட்டது. 'பூனைக்கிட்ட விளையாடினது போதும் படிக்க வாங்க' என்ற குரலைக் கேட்டதும் அதிலிருந்து விடுபட முடியாதவர்களாய் நகர்ந்து சென்றார்கள்.

குழந்தையான இளையவன் பிஞ்சுப் பூனைக்குட்டி ஒன்று மாடியிலிருந்து கைதவறி கீழே விழுந்து விட்டதான கனவிலிருந்து விழித்தான். பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த அண்ணனைக் காணாது மலங்க மலங்க விழித்தபடியே எழுந்தான். குழந்தையின் உள்ளுணர்வு சொல்லியது அவன் அங்கேதான் சென்றிருப்பானென்று. அம்மா சமையலில் ஈடுபட்டிருந்தாள். மூத்த குழந்தை பூனையிடம் விளையாடியபடி இருந்தது. இளைய குழந்தை வந்து பார்க்கும்போது குட்டிப்பூனைகளின் பக்கத்தில் தாய்ப்பூனை படுத்திருந்தது. பிற



> ‘ என் குட்டிகளை எடுத்துக் கொஞ்சினால் கூட நான் ஒன்றும் செய்யப்போவதில் லை என்பது போல் நெகிழ்ச்சியாகப் படுத்துக்கிடந்தது. சில வேளைகளில் மாத்திரம் தலையைச் சற்று வெளியில் ஒரு திருப்பு திருப்பி அரை மயக்கத்தில் குட்டிகளை நோட்டமிடுகிறதா, இல்லை சுகபோதையில் மிதக்கிறதா என்று உணரமுடியாத பரவசத்தில் சரிந்து கிடக்கும் ’



நாட்களைப் போல் குழந்தைகளை மெனக் கெட்டு எழுப்ப வேண்டிய பணி இன்று இல்லை என்கிற நிறைவோடு அவள் செல்ல கொஞ்சலாக காலை வணக்கத்தைச் சொல்லிக் கொண்டாள். அம்மா சொன்னாள் ‘குட்டிகளுக்குத் தாய்ப் பூனை பால் குடுத்திட்டிருக்கு, தொந்தரவு செய்யாதுங்க’ என்றாள். குழந்தைகள் முகம் வாடிப்போனது. இனிமேல் குட்டிகளை எடுத்து விருப்பம் போல் விளையாட முடியாதே என்கிற சிந்தனையோடே தாய்ப்பூனையை குழந்தைகளில் ஒருவன் தொட்டான். இதைக் கவனித்த அம்மா அதட்டினாள். இவர்கள் இன்னும் நெருங்கி தாய்ப்பூனையைச் சினேகத்தோடு தடவிக்கொடுத் தார்கள். பூனை எந்தவித எதிர்ப்பையும் காட்ட வில்லை. ‘என் குட்டிகளை எடுத்துக் கொஞ்சினால் கூட நான் ஒன்றும் செய்யப்போவதில்லை’ என்பது போல் நெகிழ்ச்சியாகப் படுத்துக்கிடந்தது. சில வேளைகளில் மாத்திரம் தலையைச் சற்று வெளியில் ஒரு திருப்பு திருப்பி அரை மயக்கத்தில் குட்டிகளை நோட்டமிடுகிறதா, இல்லை சுகபோதையில் மிதக்கிறதா என்று உணரமுடியாத பரவசத்தில் சரிந்து கிடக்கும். குட்டிகள் ஒன்றை ஒன்று முண்டியடித்துக்கொண்டு வற்றிப்போன பால் காம்பில் வாயை வைத்துச் சப்பிக்கொண்டிருக்கும். குழந்தைகள் குட்டிகளைக் கையில் எடுக்கும் ஆசையோடு நின்றிருந்தார்கள். ஆனால், தாய்ப்பூனை குட்டிகளுக்கு இன்னும் பால்கொடுத்துக் கொண்டிருந்தது. பள்ளிக்குச் செல்லும் கடைசி நிமிட நேரத்திலும் ஒருமுறை வந்து பார்த்துச் சென்றார்கள். இன்னும் தாய்ப்பூனை குட்டிகளோடு படுத்திருப்பதைப் பார்த்து நின்றார்கள்.

சாயங்காலம் பள்ளிவிட்டு வீடு திரும்பியதும் முதல் வேலையாகப் பூனைகிடந்த இடத்திற்கு ஓடிவந்தார்கள். பூனைக்குட்டிகளைக் காணவில்லை. பூனைக்குட்டிகளைத் தாய்ப்பூனை எங்கோ கவ்வி எடுத்துச் சென்றுவிட்டது என்றாள் அம்மா.

ஞாயிற்றுக்கிழமை பகல் பொழுதுகளில் குழந்தை களில் ஒன்று அம்மாவின் பார்வையிலிருந்து தப்பித்துத் தனியே வீட்டிலிருந்து ரெண்டு மூன்று விளைத் தள்ளியிருக்கும் கொல்லாந்தோப்புக்குள் சென்றது. அது ஆள் அனக்கம் இல்லாத பிரதேசமாக இருந்தது. இரவு தூக்கத்தில் எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்த பூனையின் குரல், சின்னக் குழந்தையின் அழுகிற குரல் மாதிரியிருப்பதை உணர்ந்த குழந்தை கனவில் கண்ட அதே இடத்தில் வந்துநின்றது. ஆள் அரவமில்லாது கொல்லாந்தோப்புக்குள் சருகுகள் சரசரக்க நடந்துசென்று பூனையைத் தேடியது. பூனைக் குட்டியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்கிற வேட்கை தீவிரமாக அடிமரம் நோக்கியும் சுள்ளிக் கட்டுகளைப் பார்த்துக்கொண்டும் நகர்ந்தது. குழந்தை கனவில் கண்ட அதே இடத்தில்தான் பூனைக்குட்டிகள் மூன்றும் ஒன்றையொன்று நெருங்கியடித்தபடி கிடந்தன. மூன்று பூனைக் குட்டிகளையும் தோளிலும் மார்பிலுமாகத் தூக்கிப் போட்டபடி வீட்டை அடைந்தான். இப்போது பகல்பொழுது முழுமையும் பூனைக்குட்டிகளோடு களித்தார்கள் குழந்தைகள். குட்டிப்பூனைகள் குடிக்கும் என்று நம்பி தாயிடம் வேண்டி வாங்கி வைத்த பால் முழுவதையும் தாய்ப்பூனை குடித்து விட்டு, குட்டிகளுக்குப் பால் கொடுப்பதைக் கண்டார்கள். தாய்ப்பூனை குழந்தைகளுக்குத்

தோழமையாகிவிட்டது. தாய்ப்பூனையை குழந்தையைப்போல் எடுத்துக் கொஞ்சும் அளவுக்கு இயல்பாகிவிட்டார்கள். அம்மா பள்ளிப்பாடங் களைப் படிக்கச் சொல்லி அழைத்தாள். குழந்தைகள் அடம்பிடித்தார்கள். தாங்கள் கவனிக்காத சமயத்தில் பூனைக்குட்டிகளைத் தாய்ப்பூனை கவ்வி எடுத்துச் சென்றுவிடும் என்கிற எண்ணம் குழந்தைகளுக்கு இருந்தன. பூனைக்குட்டிகளும் ரெண்டு மூன்று நாட்களாக எங்குமே செல்லவில்லை. அம்மா பால் வைத்தாள், பெரிய பூனை குடித்தது. பகல் வேளையில் அதற்கு மீன் செதிலும் கரிசனத்தோடு சில துண்டு மீன்களையும் வைத்தாள். 'பூனைக் குட்டி இங்கேயே தங்கிடுமாமா'? என்று அம்மாவிடம் கேட்டார்கள். அம்மாவுக்குப் பதில் ஏதும் சொல்லத்தெரியாது ஆமோதித்தாள். கொஞ்ச நாட்களாக குழந்தைகள் அதட்டல் பெறாமல் இயல்பாக எழும்புவது அவளுக்கு சந்தோஷமே. பூனைக்குட்டிகளுக்குச் சற்று பிராயம் கூடிவந்தது. ஐந்தாறு சதுர அடிகளுக்கு ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. குழந்தைகள் காலைப்பொழுதும், மாலைப்பொழுதும் பூனைகளோடு விளையாடி னார்கள். இப்படித்தான் பூனைகளைப் பற்றிய சிந்தனை மறந்திருந்த சமயம் பூனைக்குட்டி களோடு பூனையையும் காணவில்லை. குழந்தைகள் பூனையைத் தேடி ஓடவில்லை. பூனைகளோடு விளையாடி அலுத்து விட்டதுபோல் காணப் பட்டார்கள்.

பக்கத்து வீட்டுக்காரி சொன்னாள் 'பிள்ளைங்களா பூனைக்குட்டிங்க எங்க வீட்டு மாடியில விறகு கூட்டத்துக்குள் கிடக்குது'. குழந்தைகளுக்குத் திரும்பவும் உற்சாகம் களைகட்டியது. மூத்த



குழந்தை, அணுகச் சிரமமான விறகுக் குவியலின் அடியில் கிடந்த பூனைக்குட்டி ஒன்றை எடுத்துக் கையில் வைத்துவிட்டுத் திரும்பவும் ஒரு பூனைக் குட்டியை எடுக்கக் குனியும்போது பெரிய பூனை ஓடிவந்து வெறிகொண்டு பிறாண்டியது. குழந்தை அழவில்லை. திரும்பவும் வயிற்றில் பிறாண்டியது. குழந்தை அதை எதிர்க்கத் துணிவில்லாதவனாய்ப் பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு பூனைக் குட்டியைக் கீழே விட்டான். இவ்வளவு நேரமும் மூர்க்கத்தோடு கர்ஜனையோடு நின்றிருந்த பூனை அமைதியாகத் திரும்பியது.

'நான் அப்பவே சொன்னேன் கேட்டியா பூனைக் குட்டிய தொடாதேண்ணு, இப்படி நடக்கும்ணு தெரியும்' எனக் குழந்தையின் தந்தை இரண்டு பேரையும் கை கால் முகம் என ஈர்க்குச்சியை எடுத்து விளாசினார். அழுது அழுது ஓய்ந்து போன குழந்தைகள் தூங்கிப் போனார்கள்.

குழந்தைகளின் அம்மா செல்வி தாய்ப்பூனை இல்லாத நேரம் பார்த்துக் குட்டிப்பூனைகளை எடுத்துக் கொண்டு அவள் வீட்டிலிருந்து தூரத்தில் இருக்கும் வனாந்தரத்தில் போட்டுவிட்டு திரும்பினாள். நாளையிலிருந்து குழந்தைகளை ஸ்கூலுக்கு அனுப்பி வைக்க புதிய யுக்தியைக் கண்டுபிடிக்க வேண்டிய வளாய் இருந்தாள் அந்தக் குழந்தைகளின் அம்மா செல்வி.

*சந்தா விபரங்கள் : மொத்தம் 12 இதழ்கள்*

*ஆண்டு சந்தா (தமிழ்நாடு) - ரூ 1000*
*ஆண்டு சந்தா (பிற மாநிலம்) - ரூ 1250*
*ஆண்டு சந்தா (வெளிநாடு) - ரூ 3250*
*தும்பி தனி இதழ் - ரூ 100*

*வங்கிக்கணக்கு விபரங்கள் :*

*THUMBI*
*Current A/c no: 59510200000031*
*Bank Name : Bank of Baroda*
*City : ERODE,*
*Branch : Moolapalayam*
*IFS Code : BARB0MOOLAP*
*(Fifth letter is "Zero")*

*UPI ID : thumbi@upi*

Paytm BHIM

*இணையம் வழியாக புத்தகம் பெற :*
*www.thumbigal.com/howtoget/*


*தொடர்பு எண் : 98438 70059*




தும்பி

சிறார் மாத இதழ்
சந்தா செலுத்த,
அன்பளிக்க...

தொகை பரிமாற்றம் செய்த பிறகு thumbigal@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு உங்களுடைய சந்தா முகவரி மற்றும் தொடர்பு எண்ணை அனுப்பவும், அல்லது மேற்கண்ட எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.



ரே ரே ரோ ராட்டினம்
கிறுகிறுக்கும் ராட்டினம்
ரா ரா ரீ ராட்டினம்
விறுவிறுக்கும் ராட்டினம்.

கோவில் திருவிழா வந்தாலே
குடை விரிக்கும் ராட்டினம்
குட்டிக் குழந்தைகள் எல்லோரும்
சுத்தி மகிழும் ராட்டினம்.

குதிரை வச்ச ராட்டினம்
குதிச்சு குதிச்சு போகுமாம்
மான்கள் வச்ச ராட்டினம்
துள்ளித் துள்ளி சுத்துமாம்.

தரையில் கால்கள் தொடாமல்
விரைவாய் சுத்த வைத்திடுமே
குறைவாய் கட்டணம் உள்ளதால்
நிறைய குதூகலம் தந்திடுமே.

எத்தனை தடவை என்றாலும்
சுத்திக் கொண்டே இருப்பேனே
தானாய் சுத்தி நிற்கும் வரை
நானாய் இறங்க மாட்டேனே.

~ சின்னக்காளி